முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் ஜனந்தனர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

13.04.2019, சனிக்கிழமை

1. **மக்களை காக்கும் சக்தியாக**
**மாதரும பலம் கொண்டு வந்து**
**ஆக்கமுடன் சன்மார்க்கம் வளர்க்கும்**
**ஆறுமுக அரங்கமகா ஞானியே**

2. ஞானியே உன் பெருமை கூறி
ஞாலமதில் நித்ய பிரசன்ன ஆசி
கனிவுபட **விளம்பி சேல் திங்கள்**
**கண்டுரைக்க முப்பான் திகதி காரி வாரம்**
**(விளம்பி வருடம் பங்குனி மாதம் 30ம் நாள் 13.04.2019, சனிக்கிழமை)**

3. வாரமதில் ஜனந்தனர் யானும்
வழங்கிடுவேன் உலகோர் நலம் பெற
அறம் வளர கலிகால கஷ்டங்கள்
அனைத்தும் அகன்று ஓடும்

4. ஓடவே மக்களிடை அமைதி
உயர்வான பண்புகளும் வளர்ந்து
நாடுமே பாதுகாப்பும் நிறைவும்
நன்மையான செயல்கள் அனைத்தும்

5. அனைத்தும் வளர்ந்து பெருகியே
அகிலத்தவர் தேவைகள் அனைத்தும்
துணைபட ஆறுமுகன் தயவால்
தடையிலா பூர்த்திபடும் என்பேன்

6. என்கவே அரங்க ஞானியரின்
ஏழாம் படை வீட்டுத் தொடர்பை
இன்பமுற கொண்ட தேசங்களே
இந்த கலியுகத்தில் ஏற்றம் காணும்

7. காணுமே பருவமழை குன்றா
கழனி கிருஷி நீர்நிலவளமென
ஞான பூமியாக மாறக் கூடும்
ஞானதேசிகன் தலைமை கொண்ட மக்கள்

8. மக்களெல்லாம் அரங்கன் ஆசிபட
மகத்துவமும் மாற்றமும் காண்பர்
தேக்கமில்லா பொருள் வளமும்
தொழில் கீர்த்தியும் கண்டு சிறப்பர்

9. சிறப்பு தரும் முருகப்பெருமானின்
சரவண சோதி வழிபாடு தன்னை
மறுப்பில்லா ஏற்றும் வரும் மக்கள்
மரணமும் வென்று சிறப்பர்

10. சிறப்பான வாழ்வும் வளமும்
செயல்பாடுகளில் முதன்மை கண்டு
மறுப்பிலா வெற்றியும் பலமும்
மண்ணுலகை மாற்றும் சக்தியும்

11. சக்தியும் பெற்று அரங்கன்
சரவண சோதி வழிபாட்டின் மூலம்
சக்தியுகமாக ஞானயுகம் படைப்பர்
சாற்றிவந்த நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் ஜனந்தனர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

உலக மக்களை காக்கின்ற மகாசக்தியாக எல்லையில்லாது தருமங்களைச் செய்து மாதரும பலம் கொண்டு முருகப்பெருமானின் அவதாரமாக இவ்வுலகினில் அவதரித்து ஆக்கமும் ஊக்கமும் கொண்டுமே சன்மார்க்கத்தினை வளர்த்து மக்களை வழிநடத்தி கடைத்தேற்றுகின்ற மகா குருவே ஆறுமுக அரங்கமகா தேசிக ஞானியே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் பங்குனி மாதம் 30ம் நாள் 13.04.2019, சனிக்கிழமையான** இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே ஜனந்தனர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் ஜனந்தனர்.

உலகினில் அறம் வளரவளர கலியுகத்தின் துன்பம் எல்லாம் விலகி ஓடிவிடும். கலியுக துன்பங்கள் விலகி மக்களிடையே அமைதி பெருகிடும், உயர்வான பண்புகளும் வளர்ச்சி அடையும். உலகினில் உள்ள தேசங்கள் எல்லாம் அருள் பாதுகாப்பை பெறும், மக்கள் மனநிறைவுடன் வாழ்வார்கள். நாட்டினில் நற்செயல்கள் அதிகமாகி மக்களின் தேவைகள் எல்லாம் முருகப்பெருமான் தயவால் தடையின்றி பூர்த்தியாகும்.

ஆதலினாலே அளவிலாது தர்மங்கள் செய்து இவ்வுலகினில் தர்மத்தை நிலைநிறுத்தி கலியுக துன்பங்களில் இருந்து மக்களை காக்கும் ஆறுமுக அரங்கமகா தேசிகனார் அமைத்திட்ட சர்வவல்லமைமிக்க யுகமாற்ற ஞானபீடமாகிய ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலின் தொடர்பினை எந்த நாடுகளெல்லாம் கொண்டுள்ளதோ, எந்த நாடு அரங்கரின் கொள்கைகளை பின்பற்றி தர்மத்தின் வழியில் நடக்கிறதோ அந்த நாடுகளே இந்த கலியுகத்தின் கோரப்பிடியினில் இருந்து விடுபட்டு முன்னேற்றம் அடையும்.

அந்த நாடுகளில் தர்மபலமும், அரங்கரின் அருள்பலமும் ஞானிகளின் ஆசியும் பெருகுவதினாலே இயற்கையும் மகிழ்ந்து பருவமழை குன்றாது தவறாமல் பெய்திடும். விவசாயம், நீர் நில வளம் என எல்லா இயற்கை வளங்களும் பெருகி நீர் ஆதாரம் பெருகி மக்கள் அமைதியும் ஞானமும் பெற்று அந்த நாடுகள் செழிப்புமிக்க ஞானபூமியாக ஆகிடும்.

ஞானதேசிகன் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரை தலைமையாகக் கொண்டு அரங்கனை பின்பற்றி ஞானவழிதனிலே செல்கின்ற மக்களெல்லாம் ஆறுமுக அரங்கமகானின் அருளாசியினால் மகத்துவம் பல பெற்று நல்ல மாற்றங்களை வாழ்வினில் காண்பார்கள். அவர்களது வாழ்வினில் தடையற்ற பொருள் வளம் பெருகிடும், தொழில் அபிவிருத்தி அடையும், தொழிலில் புகழ் நிலையை அடைவார்கள்.

வல்லமைமிக்கதும், முருகப்பெருமான் வெளிப்பட்டு ஆசி அருளும் சரவணஜோதிதனை ஏற்றி வைத்து சரவணஜோதி வழிபாடுகளை பயபக்தியுடன் செய்து வருகின்ற மக்கள் எல்லாம் மரணத்தையும் வென்று சிறப்படைவார்கள். அவர்களது வாழ்வு சிறப்பமிக்கதாய், வளம்மிக்க வாழ்வாக அமைவதோடு அவர்களது செயல்கள் எல்லாம் மேன்மையுடைய முதன்மையான செயல்களாக ஆகி எடுத்த செயல்பாடுகளில் எல்லாம் வெற்றியே காண்பார்கள்.

தருமங்கள் செய்து அரங்கனைப் பின்தொடர்ந்து ஞானவழியில் சென்று ஜோதி வழிபாட்டினை செய்து தூயநெறியில் நடக்கின்ற மக்களெல்லாம் இவ்வுலகையே மாற்றும் வல்லமை மிக்கவர்களாக ஆகி சரவணஜோதி வழிபாட்டினை உலகமெலாம் பரவிடச் செய்து இந்த கலியுகத்தை சக்திமிக்க ஞானயுகமாக ஆக்கி யுகமாற்றத்தினை ஞானபண்டிதன் முருகப்பெருமான் தலைமையில் அரங்கமகா தேசிகனாரை பின்தொடர்ந்து சென்று செய்து முடிப்பார்கள் எனக் கூறுகிறார் மகான் ஜனந்தனர்.

–சுபம்–